முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1425

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.08.2023**, வியாழக்கிழமை

1. அறமெனும் சக்தியாக வாழுகின்ற
ஆறுமுக அரங்கமகா ஞானியே
வரம் தந்து சுப்ரமணியர் யானும் இனிதே
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சோபகிருது வேங்கை திங்கள்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 07 ம் நாள், 24.08.2023 வியாழக்கிழமை)
அரங்கனுக்கு இன்னும் சக்தி பெருக உரைப்பேன்
வாசிவென்ற தலைவர் பெரும்கூட்டம்
வையகத்தில் அரங்கன் உன் தர்மத்தை மெச்சி
3. மெச்சியே உன்னோடு கலந்திருக்க
மேலவர்கள் துணை இன்னும் பெருகிவர
அச்சமற அரங்கன் தர்மம் கிளை சங்கங்களாக
அகிலமெங்கிலும் பரவி இனிதே
4. இனிதே அரங்கன் மார்க்கம் உயர் மார்க்கமாக
இவ்வுலகமெங்கும் பரவி நிற்கும்
கனிவேலவன் யான் கருணைகொண்டு அருள
கலியுகத்தில் அரங்கன் சன்மார்க்கமே உயர் மார்க்கமாக
5. ஆகவே மகா சக்திகளாக புண்ணியபலம் பெருகி
அகிலத்தார்க்கு ஆன்மீக ஞான உணர்வோடு
சக்திமிகு ஞான ஆட்சிக்காலங்களை
சகலரும் சர்வ லோகமும் அடையும் வண்ணம்
6. வண்ணமுடன் அற்புதத்தை நடத்தும்
வழிகாட்டி அரங்கன் தொண்டர்படைகளே வையகமெங்கும் நிரம்பி பறைசாற்றி
ஆறுமுகப்பெருமான் என் தலைமை கொண்ட
அற்புதமான ஞான ஆட்சிக்கு வழி வகுக்கும்

7. ஆகவே அரங்கன் தொடர்பு கூட்டி
அகிலத்தார் இந்த வாய்ப்பை பயன்படுத்தி
நேசமுடன் பிரணவக்குடில் நாடி வந்து
நிலவுலகில் வாழும் ஞானி அரங்கனிடம்

8. அரங்கனிடம் தீட்சை உபதேசமோடு
ஆற்றல்பட அரங்கன் தரும் அருளமுது உண்டு
மாற்றம் வேண்டி தொடர்ந்து பூஜித்து வணங்க
மகாமந்திர ஜெபதபங்கள் உலகோர் மிகுந்த எண்ணிக்கையில் உருவேற்ற

9. ஏற்றவே உலகமெங்கும் மாற்றம்
இனிதே அரங்கன் வேண்டலாக
ஆற்றல்பட ஆறுமுகன் யான் நடத்துவேன்
அற்புதத்தை உலகமெங்கும் நிரப்பி அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—